//நினைவூட்டு –2//
// மிக மிக அவசரம்//

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க.எண்.2145/ஆ5/2023, நாள். 18.07.2023**

•••••

பொருள் பள்ளிக் கல்வி – தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையம் – புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருது (Inspire Award) 2023–2024ம் ஆண்டிற்கான புதிய பதிவுகள் பதிவு செய்ய கோருதல் – தொடர்பாக

பார்வை
1. சென்னை, தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மைய செயல் இயக்குநர் (முகூபொ) அவர்களின் கடித எண். 2226/P1/2023, நாள்.22.05.2023 , 23.06.2023 மற்றும் 14.07.2023
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடித நாள். 24.05.2023 மற்றும் 03.07.2023

•••••

2023–2024ம் ஆண்டிற்கான புத்தாக்க அறிவியல் ஆய்வு மானக் விருதுகளுக்கான (Inspire Award) புதிய பதிவுகள் மே 1ம் தேதியிலிருந்து தொடங்கப்பட்டுள்ளது. அதற்காக பள்ளி மாணவர்கள் கடந்த ஆண்டுகளில் பதிவு செய்ததைப் போலவே இந்த ஆண்டும் அனைத்துப் பள்ளிகளில் **6–ம் வகுப்பு முதல் 10–ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள்** பதிவு செய்ய வேண்டும் எனவும், இதற்காக **www.inspireawards-dt.gov.in** என்ற இணையதளம் 2023 மே 1–ம் தேதியிலிருந்து ஆகஸ்ட் 31–ம் தேதி வரை செயல்படும் என 22.05.2023 நாளிட்ட பார்வையில் காணும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதற்கிணங்க இப்பொருள் சார்பாக பார்வையில் 2–ல் காணும் இவ்வலுவலக கடிதங்கள் வாயிலாக உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டது.

எனவே 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களில் அறிவியல் ஆர்வம் உள்ள மாணவர்களை கண்டறிந்து ஊக்கப்படுத்துவது, பள்ளி தலைமையாசிரியரின் கடமையாகும்.

எனவே, இதற்கான பதிவுகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும், தெரிந்து கொள்ளவும், பதிவு செய்யவும் இணையதள முகவரி

| |
|---|
| www.inspireawards-dst.gov.in |
| பதிவு செய்வதற்கான கடைசி நாள். 31.08.2023 |

**இதுவரை வேலூர் மாவட்டத்தில் மாணவர்கள் விவரங்களை எந்த பள்ளியும் பதிவு செய்ய வில்லை என 14.07.2023 நாளிட்ட கடித்த்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே நினைவூட்டுக்கு இடமளிக்காமல் இக்கடிதம் கண்ட உடன் பள்ளிக்கு 5 மாணவர்கள் வீதம் தவறாமல் உடனடியாக மேற்காண் இணையதளத்தில் பதிவு செய்யும்படி அனைத்து வகை நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மற்றும் மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**குறிப்புகள் –**

1. பதிவு செய்யும்போது அலைபேசி எண் ஓராண்டு அல்லது ஈராண்டுத் தொடர்புக்கு ஏற்ற வகையில் அமையுமாறு பதிவிட வேண்டும். பள்ளியின் தொலைபேசி எண் இருப்பின் அதை அவசியம் பதிவிட வேண்டும். பள்ளி மாறிச் செல்பவர்கள், ஓய்வு பெறப்போகிறவர்களின் அலைபேசியைக் கண்டிப்பாகப் பதிவிட வேண்டாம்.
2. மின்னஞ்சல் கண்டிப்பாக பள்ளி மின்னஞ்சல் மட்டுமே குறிப்பிட வேண்டும். தனிப்பட்ட மின்னஞ்சல்களைப் பதிய வேண்டாம்.

19/7/23

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

19.07.23

பெறுநர்
தலைமை ஆசிரியர்கள் / தாளாளர்கள்/ முதல்வர்கள்,
அரசு / நிதியுதவி/ மெட்ரிக்/ மேல்நிலை/உயர்நிலை/நடுநிலைப்பள்ளிகள்
வேலூர் மாவட்டம்

நகல் –

1. செயல் இயக்குநர் (முகூபொ) ,
   தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில்நுட்ப மையம்,
   சென்னை – 600 025.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் /தொடக்கக் கல்வி)
   வேலூர் மாவட்டம்.
   (இப்பொருள் சார்பான விவரங்கள் பள்ளிகளுக்கு தெரிவிக்கும் பொருட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்படுகிறது.)